தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௯	திருவள்ளுவர் யாண்டு ௨௲௭ இராட்சச, தை (1976 — சனவரி — பிப்ரவரி)	மலர் ௰

'சமயக் காழ்ப்பு'

[Sectarian Rivalry]

ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ.

தொல்பொருளாய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

ஆதியில் மனிதன் இயற்கையைத் தெய்வமாக வணங்கினன். பின்னர் தன் வாழ்வில் அச்சந்தருவனவற்றையும், தனக்குத் துன்பம் விளைவிப்பவைகளையும் வணங்கலானன். அறிவு வளர வளர இயற்கைச் சக்திகளுக்கு மானிட வடிவம் கொடுத்து அவற்றை வழிபடலானன். வேதகாலத்தில் இயற்கைச் சக்திகளுக்குப் பல்வேறு பெயர்களையும், வடிவங்களையும் கொடுத்து வேள்வியின் மூலம் இறைவழிபாடு செய்யலாயினர். புராண, இதிகாச காலத்தில் தனித்தனிக் கடவுளருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால், பல சமயப் பிரிவுகள் தோன்றின. இந் நூல்கள் தங்கள் கடவுளே முழுமுதற்பொருளெனக் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் சமயச் சண்டையும், காழ்ப்புணர்வும் ஏற்படலாயிற்று தமிழகத்தில் சைவ சமயமும், வைணவ சமயமும் நெடுங்காலமாக இச்சோதனைக்குட்பட்டிருந்ததை இங்கு காண்போம்

இலக்கியச் சான்றுகள் :

சங்க கால மக்கள் திருமால், இந்திரன், வருணன், செவ்வேள், சிவன், நான்முகன், பலராமன், கொற்றவை முதலிய பல கடவுளரை வழிபட்டிருப்பினும் அவர்களுக்குள் சமயக் காழ்ப்பு கொண்டிருந்ததாகத் தெரியவில்லை சிவன், திருமால், நான்முகன் ஆகிய மூன்று கடவுளரை வழிபடுவதில் பொதுநோக்குடையவராகவே இருந்திருக்கின்றனர், அக்காலத்தில் தவம்

செய்த முனிவர்கள் முக்கோலினைக் கையினில் கொண்டிருந்தன ரென கலித்தொகை கூறுகிறது[1] இம்முத்தலைக் கோல் (திரி தண்டம்) சிவன், திருமால், நான்முகன் ஆகிய மும்மூர்த்தி களைக் குறிக்கும் சின்னமாகக் கருதப்பட்டது. சிவனும், திருமா லும் இணைந்த தோற்றமாகிய அரியரனை,

'பெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம்'[2] என

அகநானூறு குறிப்பிடுகிறது. எனவே சங்க காலத்தில் மக்கள் சிவனையும், திருமாலையும் ஒன்றாக வழிபடுவதில் கருத்து வேறு பாடு கொள்ளவில்லை என்பது புலனாகும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்தில் இந்து சமயம் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் மறுமலர்ச்சி யடைந்தது. நாயன்மார்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு சைவத்தை வளர்த்தது போன்று ஆழ்வார்கள் திரு மாலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வைணவத்தை வளர்த்து வந்தனர். இவர்களது பாடல்கள் சிலவற்றிலும் சிவனும், திரு மாலும் ஒன்றாகிய அரியரனைப்பற்றிய செய்திகள் உள்ளன. மேலும் இவர்களது முக்கிய குறிக்கோள் புத்த, சமண மதங்களை ஒழித்து இந்து சமயத்தை நிலைநாட்டுவதேயாகும். இருப்பினும் சில தேவாரப் பாடல்களில் சிவனது வீரச் செயல்களைக் குறிக்கும் போது திருமால் எடுத்த கூர்மம், வராகம் ஆகிய இரு அவ தாரங்களையும் சிவன் பொருது வெற்றிகண்டதாகச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"முற்றலாமை யிளநாகமோடேன முளைக்கொம்
பவைபூண்டு
வற்றலோடு கலனாப்பலி தேர்ந்தென துள்ளங்
கவர்கள்வன்"[3]

என்னும் பகுதியால் வராக அவதாரத்தின் கொம்பினையும், கூர்ம அவதாரத்தின் ஓட்டினையும் (ஆமை ஓடு) சிவன் தனது திரு மேனியில் அணிகலன்களாக அணிந்தார் எனத் தெரியவரு கிறது. இன்னும் சில தேவாரப் பாடல்களில் வராக அவதாரத் தின் கொம்பினைச் சிவன் பிடுங்கிய செய்தி காணப்படுகிறது.

---

1. கலித்தொகை, பா. 9, வரி 1, 2.
2. அகநானூறு, பா. 360.
3. சம்பந்தர். திருப்பிரமபுரம் பா. 2, வரி 1-2

எனவே தேவாரம் பாடப்பட்ட காலத்தில் சைவ, வைணவ சமயக் காழ்ப்பு மக்கள் மனதில் தோன்றலாயிற்று என்பது தெளிவாகும்.

தேவாரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் சமயக் காழ்ப்பு பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. பதினோராம் திருமுறையில் பலபாடல்கள்,[4] இரணியனைக் கொன்ற நரசிம்மரின் கோபத்தை அடக்குவதற்காகச் சிவன் எடுத்த சரபமூர்த்தியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சைவ, வைணவ சமயச் சண்டையின் காரணமாகத் தில்லை சிவன்கோயிலில் இடம் பெற்ற திருமாலின் சிற்பம் கடலில் எறியப்பட்டது இதை,

‘ ... ... போத்தின்மேல்
தில்லைத் திருமன்ற முன்றிற் சிறுதெய்வத்
தொல்லை குறும்பு தொலைத் தெடுத்து” என்னும்

அடிகளாலும்,[5]

“ ... ... புறம்பிற் குறும் பெறிந்து
முன்றிற் கடலகழின் மூழ்கு வித்த சென்னித்
திருமகன் ... ... ”

என்னும் பகுதியாலும் [6] அறியக்கிடக்கிறோம். இதுவன்றி அதிராசேந்திரன் காலத்தில் வைணவ சைவ சமயச் சண்டை ஏற்பட்டதால் வைணவ ஆச்சாரியாராகிய இராமானுசர் சோழ நாட்டைவிட்டு சாளுக்கிய நாடு சென்றதாகக் கூறப்படுகிறது. மேலும் சமயச் சண்டையின் காரணமாக ஏற்பட்ட புரட்சியில் சோழமன்னன் அதிராசேந்திரன் உயிரிழக்க நேரிட்டதென்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

கோயில்களும் சிற்பங்களும் :

பல்லவ அரசர்களுள் முதலாவது மகேந்திரன் காலத்தில் மண்டகப்பட்டு என்னுமிடத்தில் சிவன், திருமால், நான்முகன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் குகைக்கோயில் ஒன்று குடைவிக்கப் பட்டது மாமல்லனது காலத்திலும் மும்மூர்த்திகளுக்கென திருக்கழுக்குன்றத்தில் குடைவரைக் கோயிலொன்று நிறுவப் பட்டது. மாமல்லையில் இராசசிம்மனால் ஏற்படுத்தப்பட்ட தர்ம

4 திருமளிகைத் தேவர் திருவிசைப்பா, 1 : 10 : 1-2; பட்டினத்தடிகள் 1 : 40 : 35-36
5, குலோத்துங்க சோழனுலா — வரி 76-78.
6. இராசராசசோழனுலா — வரி 65-67

ராசரதத்தில் சிவனும், நெடுமாலும் ஒன்ருகிய அரியரனின் சிற்பம் காணப்படுகிறது. பல்லவர்காலக் கட்டடக் கோயில் களின் புறச்சுவர்களில் தென்புறம் தக்கணமூர்த்தியும், மேற்புறம் திருமாலும், வடபுறம் பிரம்மனும் இடம்பெற்றுள்ளனர். இம் மூவரையும் முற்காலச் சோழர் கோயில்களிலும் காணலாம் சில முற்காலச் சோழர் கோயில்களில் மேற்கு தேவகோட்டத்தில் அரியரன் அல்லது அர்த்தநாரி சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. பல்லவர், முற்கால சோழராட்சியில் சிவன், திருமால், நான் முகன் ஆகியோரை வழிபடுவதில் மக்கள் அதிக கருத்துவேறு பாடு கொண்டதாகத் தெரியவில்லை.

பிற்காலச் சோழர் கட்டிய கோயில்களில் மும்மூர்த்திகளது சிற்பங்கள் இடம் பெற்றிருப்பினும், இக்காலத்தில் சமயச் சண்டைகள் மிகுந்திருந்தன இம்மன்னர்கள் காலத்தில் கட்டப் பட்ட தாரசுரம், திரிபுவனம் ஆகிய இரு இடங்களிலுள்ள கோயில்களில் சிவன், நரசிம்மரைக் கொல்லும் சரபமூர்த்தியாகக் காணப்படுகிறுர். இவ்விரு கோயில்களுக்கு முன்னர் கட்டப்பட்ட எந்தக் கோயில்களிலும் இத்தகைய சிற்பங்கள் இடம் பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் சோழ நாட்டில் கி. பி. 12-ம் நூற்றுண்டில் ஏற்பட்ட சைவ, வைணவ சமயக் காழ்ப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையே இச்சிற்பங்கள் என்று கூறப்படுகிறது [7] பிற்காலச் சோழர் கட்டிய சில கோயில் விமானங்களில் சரபமூர்த்தி, மச்ச அவதாரத்தைக் கொன்ற கொக்குவடிவ சிவன் ஆகிய சுதை வடிவங்கள் காணப்படு கின்றன.

கி பி 1160-ம் ஆண்டில் திருக்கடையூர் என்னும் ஊரைச் சார்ந்த சபையோர், சைவ சமயக் கோயில்களில் முக்கிய அங்கம் வகிப்பவர்கள் வைணவ சமயத்தவர்களுடன் வேற்றுமையின்றித் தொடர்பு கொண்டிருந்தால் அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு சிவன் கோயில்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதாகக் கல்வெட்டொன்று கூறு கிறது [8] சைவ சமயத்தினர், வைணவ சமயத்தின் மீது அக் காலத்தில் எவ்வளவு வெறுப்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இது முக்கிய சான்ருகும்

விசய நகர மன்னர்களாட்சியிலும் சமயக் காழ்ப்பு இருந்த தற்குச் சிற்பங்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன காஞ்சி

7, Dr. R. Champakalakshmi. "Some Iconographic Concepts in the Tamil Country" (Ph. D. Thesis) p 220

8. இந்திய கல்வெட்டறிக்கை எண். 257/1925

ஏகாம்பரநாதர் கோயிலின் முன்னருள்ள மண்டபத்தூண்களில் நரசிம்மரைக் கொல்லும் சரபமூர்த்தி, மச்ச அவதாரத்தைக் கொக்குவடிவங்கொண்டு கொன்ற சிவன் ஆகியோரது சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பிற்காலக் கோயில்கள் சிலவற்றிலும் இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

தற்கால சமயப்போக்கு:

தற்காலத்தில் வைணவ, சைவ சமய சண்டைகள் அதிகம் இல்லை எனினும், பொதுவாக வைணவ சமயத்தவர் திருமாலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் சிவனுக்குக் கொடுப்பதில்லை. இதுபோன்று சைவ சமயத்தவரும் திருமாலுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதில்லை. இதற்கு விதிவிலக்காக சைவ சமயத்தைச் சார்ந்த பலர் சமய வெறுப்பின்றி திருமாலையும், வைணவ சமயத்தைச் சார்ந்த பலர் சிவனையும் வழிபடுவதைக் காண்கிறோம். ஆனால் வைணவ சமயத்திற்குள்ளே வடகலை, தென்கலை என்ற பிரிவு ஏற்பட்டு, வழிபாட்டு முறையில் வேறுபாடு காணப்படுகிறது. வேதாந்த தேசிகர் காலத்தில் ஏற்பட்ட இப்பிரிவால் சமயச் சண்டைகள் வலுப்பெற்றன நம் நாட்டை ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் இது பற்றி பல வழக்குகள் தொடரப்பட்டன, இந்த நூற்றாண்டிலும் இத்தகைய சமயப் பூசல்கள் ஏற்பட்டு நீதிமன்றம் வரை வழக்குகள் தொடரப்பட்டதை நாம் அறிவோம்

சமயப் பொதுநோக்கு:

மக்கள் இறைவனை வழிபடுவதில் பொதுநோக்குடையவராக இருத்தல் வேண்டும். நாம் பல்வேறு பெயர்கள் சூட்டி, பல வடிவங்களில் வணங்கும் கடவுள் ஒன்றே என்பதை உணர வேண்டும். இறைவனுக்கு நம் முன்னோர் தங்கள் விருப்பப்படி பல்வேறு வடிவங்களைக் கொடுத்து வணங்கியமை சமய வேறுபாடு ஏற்படவேண்டும் என்ற நோக்கத்திற்காக அல்ல என்பதை மனதிற் கொள்ள வேண்டும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை எப்பெயரிட்டும், எவ்விதத்திலும் வணங்கலாம். ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீர், கடல்நீர், ஆற்றுநீர். கிணற்றுநீர், மழைநீர் என இடத்தின் பொருட்டு பெயர் மாறி அழைக்கப்படுவதுபோன்று ஆதியந்தம் இல்லாத பரம்பொருள் மக்கள் எண்ணப்படியே சிவன். பிரம்மன், திருமால், சக்தி, கணேசன், முருகன் எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டுள்ளது. ஒருவர், பிறர் வணங்கும் கடவுளைப் பழித்துக் கூறுவது தான் வணங்கும் இறைவனின் மற்றொரு வடிவத்தைப் பழித்துக் கூறுவதாகும். எனவே, சமயக் காழ்ப்பு மனித நல்வாழ்விற்குத் தேவையற்றதென்பதை மக்கள் நன்கு அறிய வேண்டும்.

பாவேந்தரின் வரலாறு பற்றி...

இரா இளவரசு, எம் ஏ. பி எச்டி.,

சூழ்நிலை :

இன்றைய தமிழகத்தின் தமிழ் உணர்ச்சி, சீர்திருத்த வேட்கை, விடுதலை ஆர்வம் ஆகியவற்றிற்கு அடிப்படை அமைத்த சிலரில் பாரதிதாசன் ஒருவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்பாட்டிலக்கிய வரலாற்றில் அவரின் சுவடுகளே ஆழமாகப் பதிந்துள்ளன. தமக்குப் பின்னே ஒரு பாட்டுக்குயில்களின் பட்டாளத்தை உருவாக்கிய பெருமையும் அவருக்குரியது. அவரின் பாடல்களைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்பிய பெருமைக்குரியவர்கள் இன்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கிறார்கள். படக்காட்சியிலிருந்து பல்கலைக் கழகப் பாடநூல் வரை பாரதிதாசன் பாடல்கள் இன்று இடம் பெறுகின்றன. சென்னை, அண்ணாமலை, மதுரை, கேரளம் முதலிய பல்கலைக் கழகங்களில் 'முனைவர்' முதலிய பட்டங்களுக்கான ஆய்வுப் பொருளாகப் பாரதிதாசன் படைப்புகள் அமைந்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் முழுமையும் செம்மையுமுடைய 'பாரதிதாசன் வரலாறு' உடனடியாக வெளியிடப்படுதல் காலத்தாற் செய்யவேண்டிய கட்டாயப் பணியாகும்.

வெளிவந்தவை :

இது வரை வெளியாகியுள்ள 'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே' (முல்லை முத்தையா), 'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்' (கலைச்செல்வன்), 'கவிஞரின் கதை' (மணி), 'பாவேந்தர் பாரதிதாசன்' (மு மாணிக்கம்), 'புரட்சிப்பாவலர் பாரதிதாசன்' (பெருஞ்சித்திரன்) முதலிய வரலாற்று நூல்கள் அளவால் சிறியன. அவரின் வரலாறொன்றையே செம்மையாக நுவல்வது அவற்றின் நோக்கமன்று அங்கொன்றும் இங்கொன்றுமான உதிரிச் செய்திகளிடையே அவரின் பாட்டாற்றலைப் புலப்படுத்துவதும் அவற்றின் நோக்கமாகும். ஆதலால் அவற்றை முழுமையுடைய வரலாற்று நூல்களாகக் கொள்வதற்கில்லை அவையேயன்றிப் பாவேந்தரின் வரலாற்றுச் செய்திகள் சில கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. கவிஞர் மலர் (குயில் நிலையம்), சுடர் - பாரதிதாசன் மலர் (தில்லித் தமிழ்ச் சங்கம்),

'பாரதிதாசனின் பண்புகள்" (நா இராசவேல்) என்றுங்கு வெளிவந்தனவும், பாவேந்தரின் மகனார் மன்னர் மன்னனும், மகளார் வசந்தா அம்மையாரும் இதழ்களில் எழுதிய துணுக்குச் செய்திகளும் கட்டுரை என்னும் எல்லையினின்று சில செய்திகளைச் சொல்லுகின்றன அவ்வளவே

வேறுபாடுகள் :

மேற்சுட்டிய வரலாற்றுப் படைப்புகள் எல்லாம் தந்நிறைவு உடையன அல்ல என்பதோடு அவை வெளியிடும் செய்திகளிலும் வேறுபாடுகள் தென்படுகின்றன.

பாவேந்தர் என்று பிறந்தார்? 17—4—1891 இலா? 29—4—1891 இலா? ''பாரதிதாசன் கவிதைகள்" முதற்பதிப்பிலும் (1938) இரண்டாம் பதிப்பிலும் (1940) கவிஞர் மலரிலும் (குயில் நிலையம் 1946) 17—4—1891 பிறந்த நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்போது வெளிவரும் ''பாரதிதாசன் கவிதைகள்'' பதிப்புகளிலும் பிற வெளியீடுகளிலும், 29—4—1891 பிறந்த நாளாகக் குறிக்கப் படுகிறது முன் குறித்த நாள் பிழையாக இருந்ததால் மாற்றப்பட்டிருக்கும் போலும்! மாற்றத்திற்கான அடிப்படைச் சான்று அளிக்கப்பட வேண்டுமல்லவா?

பாவேந்தரின் தந்தையார் பெயரே (கனகசபை) பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் வரலாற்றில் அவர் தம் அன்னையின் பெயர் இடம் பெற வேண்டுமன்றோ? அன்னையார் பெயர் யாது? 'மகாலட்சுமி'யா 'இலட்சுமி'யா? மிகச் சில இடங்களிலேயே குறிப்பிடப் பெறும் அன்னையார் பெயரிலும் இந்த வேறுபாடு! 'புரட்சிப் பாவலர் பாரதிதாசன்' (பெருஞ்சித்திரன்). 'பாரதிதாசன் பாடல்களில் இயற்கை' (பி டாக்டர் நசிம்தீன்) 'பாடுங் குயில்கள்' (ஏழாம் வகுப்புத் துணைப்பாடம்) ஆகிய நூல்களில் 'மகாலட்சுமி' என்றும். சக்தி' (சித்திர பானு மலர் 7 கார்த்திகை இதழ் 3) இதழிலும், கவிஞர் மலரிலும் (குயில் நிலையம்) 'இலட்சுமி' என்றும் காணப்படுகின்றது. உண்மையான பெயர் வரலாற்றில் இடம்பெற வேண்டுமல்லவா?

பாவேந்தர்க்கு இருபத்தொன்பதாம் அகவையில் திருமணம் நடந்ததா? முப்பதாம் அகவையில் திருமணம் நடந்ததா? இதிலும் வேறுபாடு! 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' (கலைச் செல்வன்) எனும் நுலில் இருபத்தொன்பதில் திருமணம் நடந்த

தாகவும், 'புரட்சிக் கவிஞர்' (தொகுப்பு - பா. முத்தையா) எனும் நூலில் முப்பதில் திருமணம் நிகழ்ந்ததாகவும் குறிக்கப் பட்டுள்ளது.

பாவேந்தர் தம் பணிக்காலம் முடியுமுன்னே ஆசிரிய அலுவலிலிருந்து விலகிக்கொண்டாரா? அன்றி. பணிக்காலம் முடிந்து ஓய்வு பெற்றாரா? "புரட்சிக் கருத்துக்களை மக்களி டையே பரப்ப எண்ணிய காரணத்தாலும் அவற்றை எழுத வேண்டிய பணி மிகுதியாக இருந்ததாலும்" தம் பணிக்காலம் முடியுமுன்னே ஆசிரியப் பணியிலிருந்து விலகிக்கொண்டதாக ஒரு குறிப்பு (பாடுங் குயில்கள் - ஏழாம் வகுப்புத் துணைப் பாடம்) காணப்படுகிறது. ஆனால் பாவேந்தரே

'முப்பத் தேழாண் டலுவல் பார்த்தேன்
ஓய்வு பெற்றேன் ஊதியப் பேற்றுடன்'

('கவிஞரும் காதலும்' என்ற புலவர் ந இராமநாதனது நூலின் வாழ்த்துப் பகுதி') எனவும்,

'எட்டுப் பதினொன்று நாற்பத்தா றிட்ட எழிலுறுநாள்
விட்டுப் பிரிந்ததென் ஆசிரியப்பணி மேலும் எனைக்
கட்டுப் படுத்துவ தொன்றில்லை! திங்கட் கடைசிதொறும்
தட்டாது வந்திடும் ஐம்பான்வெண் பொற்காசு
சம்பளமே'

(பாரதிதாசன் குயில் 10—8—1967) எனவும் கூறியுள்ளார். இவற்றிலிருந்து பாவேந்தர் ஆசிரியப் பணியை விடவில்லை. ஆசிரியப் பணி இவரைவிட்டுப் பிரிந்தது — அதாவது நிறை காலம் பணியாற்றி முறையான ஓய்வு பெற்றார் என்று தெளி கிறோம் மேலும் "தமிழ் எழுதுவோர், பொதுத் தொண் டாற்ற நினைப்பவர் நிலையான தொழில் வருவாயை ஏற்படுத் திக் கொள்ளவேண்டும்." (மன்னர் மன்னன் — பாரதிதாசன் குயில் 10—10—1967) என்னும் கொள்கையுடையவர் பாரதி தாசன்.

ஒருவரின் வரலாற்றை மேலோட்டமாக எழுதும்போது கூட இடம் பெற்றாக வேண்டிய அடிப்படைச் செய்திகளிலேயே இத்துணை வேறுபாடுகள் எனில் ஏனைய செய்திகளைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை அதுவும் அண்மைக்காலம் வரை நம் மோடு வாழ்ந்து மறைந்த பாவேந்தரின் வரலாற்றிலா இத்தகு வேறுபாடுகள் என வியக்கிறோம்!

எளிதில் எழுதலாம்

ஐயங்களிலிருந்து தெளிவு பெறுவதற்கும் வரலாற்று அடிப் படையில் பாவேந்தரின் வளர்ச்சி தளர்ச்சிகளை மதிப்பிடுவதற் கும் முழுமையும் செம்மையுமான வரலாறென்று உடனடித் தேவை. இதை எழுதுவதற்கான முயற்சி பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டியது. எனினும் திட்டமிட்ட செயல் திறனால் எளிதில் நிறைவேறக் கூடியதே.

அறிந்தவர் பலர்

பாரதிதாசன் எழுபத்து மூன்று ஆண்டுகள் (1891—1964) வாழ்ந்தவர் முப்பத்தொன்பது ஆண்டுகளே (1882—1921) வாழ்ந்த பாரதியைக் காட்டிலும் பலரோடு பழகுகின்ற வாய்ப் பைப் பெற்றிருந்தார் நினைவுச் சுவடுகளை நிறைய விட்டுச் சென்றவர் என்பதோடு அண்மைக் காலத்திலேயே மறைந்தவர். ஆதலால் அவரை அறிந்தவர்கள் பலர் இன்றும் இருக்கின் றனர். அவர்களின் உறு துணையோடு இம்முயற்சி நிறை வேற்றப்பட வேண்டும்.

குடும்பத்தினர்

பாவேந்தரின் துணைவியார் பழநியம்மாள் அவர்கள் ஏறத் தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் தம் துணைவரொடு நல்லறம் நடத்தியவர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரின் நினைவுகளை முதலில் திரட்ட வேண்டும் புதுவை வானொலி நிலையத்தில் பணியாற்றிவரும், பாவேந்தரின் ஒரே மகனாகிய மன்னர் மன்னர் நிறைய செய்திகள் உடையவர். அவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். கரூரில் வாழும் மூத்த மகளார் சரசுவதி, அவரின் கணவர் வித்துவான் கண்ணப்பர். புதுவை நினைவு நூலகத்தில் பணியாற்றும் நடுமகளார் வசந்தா. அவரின் கணவர் தண்டபாணி, ஆகி யோரும் இம்முயற்சிக்குப் பெருந்துணை செய்யக் கூடியவர்கள். முதலில் இக்குடும்பத்தினரை அணுகிக் கருத்துக்களைத் திரட்ட வேண்டும்.

பாரதிதாசனோடு அவரின் மனைவி, மக்கள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டிலும், மிகமிகக் குறைந்த காலமே பாரதி யொடு தொடர்பு கொண்டிருந்த பாரதியின் மனைவி, மக்கள், தம் நினைவுகளை நூல்களாக (பாரதியார் சரித்திரம் — செல்லம் மாள் பாரதி, அமரன் கதை—தங்கம்மாள் பாரதி, என் தந்தை— சகுந்தலா பாரதி...) வெளியிட்டுள்ளதையும் எண்ணிப் பார்க்க

வேண்டும். பாவேந்தர் குடும்பத்தினரில் திரு. மன்னர் மன்னனும் திருவாட்டி வசந்தா அவர்களும் இதழ்களில் எழுதிய உதிரிச் செய்திகள் தவிர உருவான நூலொன்றும் இல்லை.

நண்பர்கள், மாணவர்கள்.

பாரதிதாசனோடு நெருங்கிப் பழகிய பலரை இன்றும் பார்க்கலாம். அவரின் 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டை' முதலில் (1930) வெளியிட்ட பெரியவர் திரு நோயல் (புதுவை), முப்பது ஆண்டுகளுக்கு மேல் பாரதிதாசனோடு மகனைப் போல் பழகிய திரு. இராசவேல் (சென்னை), தொடக்க காலத்தில் பாரதிதாசன் பாடல்களைப் பரப்புவதே தம் உயிர்ப்பணி எனக் கொண்டிருந்த திரு முல்லை முத்தையா (சென்னை), மன்னர் மன்னனின் திருமணத் தலைமையேற்ற நெருங்கிய நண்பர் கோவை. அய்யாமுத்து, பாரதிதாசன தன் இறுதிக் காலத்தில் மதித்துப் பழகிய புலவர் ந. இராமநாதன் (காரைக்குடி) போன்ற பலரொடும் தொடர்பு கொள்ளவேண்டும்.

பாரதிதாசனிடம் பாடங்கேட்ட மாணவர் பலரைப் புதுவையில் காணலாம். முதன் மாணாக்கரெனக் குறிக்கப்பட்ட புதுவை ச சிவப்பிரகாசம் (நாடாளுமன்ற உறுப்பினர்) முதல், இறுதிக் காலத்தில் சென்னையில் துணை நின்ற பொன்னடியான் வரை பல தோழர்கள் வாயிலாகப் பல செய்திகள் பெறமுடியும்

அரசியல், திரைத்துறை ஈடுபாடு

பாவேந்தர், பேராயக் கட்சி, தன்மான இயக்கம், திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம், 'இந்திய ஒன்றியத்தில் (யூனியனில்) சேர மறுப்போர் கழகம்,' பின்னர் திராவிடர் கழகம் என நெடிய. தொடர்ச்சியான அரசியல் ஈடுபாடு கொண்டிருந்தார். புதுவை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினர்.

கதை, உரையாடல் எழுதுதல், பாடல் இயற்றுதல் எனப் பல நிலையில் திரைத்துறைத் தொடர்பு கொண்டிருந்தார். இறுதிக் காலத்தில் பாண்டியன் பரிசையும், பாரதியார் வரலாற்றையும் படமாக்க முயன்றார்.

இத்தகு அரசியல் ஈடுபாட்டையும் திரைத் துறைத் தொடர்பையும் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வரலாறு எழுதத் துணை செய்யும்.

தாளிகை உலகம்

பல தாளிகைகளைப் பாரதிதாசன் நடத்தினர். 'ஸ்ரீ சுப்ர மண்ய பாரதியின் கவிதா மண்டலம் (1934 — 35) குயில் மாத இதழ் (1947 — 48). குயில் கிழமை யிதழ் (1958 — 61) குயில் திங்களிரிதழ் (1962) குயில் நாளிதழ் எனப் பல தாளிகைகள் அவராலேயே வெளியிடப்பட்டன. 'புதுவை முரசு', தேசபக்தன் (வ வெ சு ஐயர்), தேசசேவகன் (சைகோன் சின்னையா), சுதந்தரன் (வ, ரா.), ஹிந்துஸ்தான் (சென்னை), சக்தி (கோவிந்தன்). ஹநுமான் (விழுப்புரம்), குடியரசு, பகுத்தறிவு, திராவிட நாடு முதலிய ஏராளமான தாளிகைகளில் எழுத்தோவியங்கள் தீட்டினர். இன்னும் நூல் வடிவம் பெருத, தகுதியான எழுத்தோவியங்களையும் அவற்றில் காணலாம். அத்தாளிகைகளைத் திரட்டிப் பார்க்கும் பார்வை வரலாறு வரையப் பயன்படுவதாகும்.

உண்மையறிதல்

பாவேந்தரே வெளிப்படையாகச் சுருங்கிய அளவில் தம் வாழ்க்கை வரலாற்றைக் 'கவிஞரும் காதலும்' (புலவர் ந. இராமநாதன்) என்ற நூலின் வாழ்த்துப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார் குறிப்பாகப் பல இடங்களில் (குடும்ப விளக்கு— விருந்தோம்பல், முதியவர் செயல்கள், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி — எமனை எலி விழுங்கிற்று...) குறிப்பிட்டுள்ளார். இவ் அகச்சான்றுகளைத் திரட்டிக் கொள்ளவேண்டும். இதுவரை வெளியாகியுள்ள வரலாற்றுக் குறிப்புகளை, மேற்சுட்டிய பலவழிகளில் திரட்டிய செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு நோக்குகையில் சில மாறுபாடுகள் தென்படக் கூடும் அம்மாறுபாட்டுப் புகையில் உண்மையொளியைக் காணும் நடுவு சான்ற நன்னெஞ்சு வேண்டும்.

தக்கார் குழு

பொருள் நெருக்கடியும் வெளியீட்டுத் தொல்லைகளும் மிகுந்த இக்காலத்தில், பேரளவில் மேற்கொள்ள வேண்டிய இவ்வரலாற்று முயற்சியில் தனிப்பட்டவர்கள் ஈடுபடுவது இடர்ப்பாடானது. ஆகவே. அவர் புகழ்பாடும் தமிழக அரசினரே இம்முயற்சியில் ஈடுபடவேண்டும். பாவேந்தரின் பாடல்களைப் பரப்புவதில் தமக்கிணையில்லாத தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் தலைமையில் தக்கார் அடங்கிய குழு ஒன்று விரைவில் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

சிலம்பு புலம்புகிறது.

பேராசிரியர் கோ. தெய்வநாயகம், எம். ஏ., பி.எசி. டிப்-இன்-அக்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

மலைமீதே பரசினர்

"புலமை"யில் கட்டுரை கண்ட திரு மெய்கண்டார், வரலாற்றறிஞர். பேராசிரியர் சி கோவிந்தராசனுரை மறுக்குமுகத்தான்

"மாமலை மீதுள்ள கோயிலில் கண்டதாக திரு. கோவிந்தராசனுர். கூறுவது எதனடிப் படையில் என்று விளங்கவில்லை" (புலமை தொகுதி, பகுதி 3. பக். 59) என்று கூறுகிருர். அவர் "எது அடிப்படை என்று விளங்கவில்லை?" என்று கூறுகின்ருரோ அவ்வடிப் படையினைப் புகட்டுதும். சேரன் செங்குட்டுவன் கடவுள் மங்கலஞ் செய்த கண்ணகியாரை வணங்கிய கோட்டம் நெடுவேள் குன்றத் தாழ்வரையிலேயே இருந்ததென்பதற்கு கீழ்க்காணும் சான்றுகளைக் காண்பாம்.

உரைப் பாட்டு மடை

"காவற் பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்தனுடனுறைந்த தேவந்தியும் உடன் கூடிச் சேயிழையைக் காண்டுமென்று மதுரை மாநகர் புகுந்து முதிராமுலைப் பூசல் கேட்டு ஆங்கடைக் கலமிழந் துயிரிழந்த இடைக் குல மகளிடம் எய்தி. ஐயையவள் மகளொடும். வையை ஒரு வழியாகக் கொண்டு மாமலை மீமிசை ஏறிக் கோமகள் தன் கோயில் புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவர்க்குத் திறமுரைப்பர் மன்" எனுந் துவக்கப் பகுதி (வாழ்த்துக் காதை)

செங்குட்டுவன் நெடுவேள் குன்றத்தின் மீது கண்ணகியார் இறந்த இடத்திலேயே அவர்க்குக் கடவுண் மங்கலஞ் செய்து கோட்டமெடுத்து வழி பட்டமையினையுமறிந்து புகாரினின்றும் கண்ணகியாரின் தோழி தேவந்தியும். காவற்பெண்டும், அடித்தோழியும் புறப்பட்டு மதுரையில் ஐயையும் தம்முடன் அழைத்துக் கொண்டு வையை ஒருவழிக் கொண்டு அடுக்குமலையாம் நெடுவேள் குன்றத்து ஏறித் தாழ்வரையடைந்து ஆங்குள்ள கண்ணகியாரின் கோயிற் புக்கனர் எனுஞ் செய்தியினையும் மிக மிகத் தெளிவாக்கிற்று.

"ஆயின் இவ்வுரைப் பாட்டு மடைக்குப் புதுவகையிற் பொருள் கொள்ள முயன்று "ஏறி இறங்கும்" இலக்கியப் போக்கு முறைமையினை, எவ்வுரை கட்டுரையாசிரியர் திரு. மேய்கண்டார்க்கு அறிவுறுத்திற்றோ அறியேம்!!!

2 செங்குட்டுவன் வாய்மை

வாழ்த்துக் காதையில் செங்குட்டுவற்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டியதும் இதே குன்றத் தளத்தின்மீது தான். மாமலை மீமிசை ஏறி கோமகடன் கோயில் புக்க காவற் பெண்டு, அடித் தோழி, தேவந்தி, ஐயை முதலானோர் சேரனுக்கு முன்னர் கண்ணகியாரைப் பாடிப் பரவினர். அப்போது சேரனுக்கு கண்ணகியார் தம் செய்யாக் கோலத்தொடு அணி கலன்களையும் அணிந்தவராக, முற்றிழை விளங்கியவராக காட்சி யளித்தார் மலைமீது. இதனைச் செங்குட்டுவன் கூற்றாலேயே அடிகள்

"என்னே யிஃதென்னே யிஃதென்னே தென்னே கொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமேகலை வளைக்கை
நல் வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக்கொடியொன்று மீவிசும் பிற்றோன்றுமால் (வாழ்த்து-9)

எனக் கூறுவர்.

மீ விசும்பாகிய மலைத் தாழ் வரைக்கும் மேலுள்ள வான கத்தே சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகியார் கடவுள் நல்லணி காட்டினர்.

இதில் "பொன்னஞ் சிலம்பு" என்பதனை மேலும் ஆய்ந்து பொருள் காணுமிடத்தும்

"நிறங்கிளரருவிப் பறம்பின் தாழ்வரை"
"செங்கோட்டுயர் வரைச் சேணுயர்சிலம்பு"
"பொன்னணிநளிர் சினைவேங்கை நீழல்"

எனுந் தொடர்களையும் மனத்தகத்தே கொண்டு பார்க்கின்ற போழ்தும் அது பறம்பின் தாழ்வரையாகவே பொருண்மை யுடையதியல்பாம்.

3 கண்ணகியாரின் வாய்மை

கண்ணகியாரே தம் வாய்மொழியினால் கடவுண் மங்கலத் தோடு நிலைபெற்று உள்ள தாழ்வரைப் பகுதியினைத் தெளிவாக

"வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்"
எனக் குறிக்கின்றார். (29 : 10)

வெற்றி பொருந்திய வேலோனுக்கு உரிய குன்றம் என்பது. அடிகள் கட்டுரைக் காதையில்

'அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம்" (23 : 189—190)

என்ற பகுதியோடொத்து நெடுவேள் குன்றத் தாழ் வரையினை நினைவுறுத்தி அங்கேயே கண்ணகியார் குட்டுவனால் கடவுள் மங்கலஞ் செய்யப் பெற்று வணங்கப் பெற்றதையும் உணர்த்து கிறது கண்ணகியாரே தம கூற்றாக "இந்நெடுவேள் குன்றத்தின்கண் கடவுளாக வீற்றிருப்பதை ஒருபோதும் யான் தவிரேன்" என உறுதி யாகத் தாம் தம் இறப்பிடமாகிய நெடுவேள் குன்றத்துத் தாழ் வரையில் வேங்கைக் கானலிலேயே செங்குட்டுவனால் கடவுண் மங்கலஞ் செய்யப் பெற்று வணங்கப்படுவதாகக் கூறும்போழ்து பிறிதொரு சான்றுமிதற்குக் காட்ட ஒண்ணுமோ ?

எனவே எத்திறத்தானும் கண்ணகியார்க்குச் சேரன் கடவுள் மங்கலஞ் செய்து வழிபட்டது அவரது இறப்பிடத்திலேயே அதாவது நெடுவேள் குன்றத் தாழ்வரைப் பரப்பில்தான் என்பது இவண் நிலைநிறுத்தப் பெற்றது.

பத்தினிக் கோட்டப் படிப்புறம்

நூனெறி மாக்கள் பால்பெற வகுத்து வைத்திருந்த பத்தினிக் கோட்டத்துள் செய்தவப் பயன்களும் சிறந்தோர் படிவமும் கையகத் தனபோற் கண்ட சேரன், கடவுணல்லணி கட்புலம் புக்கபின், கோட்டத்திற்குப் படிப்புறம் வகுக்கச் சொல்லி, நாடோறும் வழி பாடுகளையும், கண்ணகியாருக்கு நிகழ்த்துமாறு ஏவினன். சேர னால் ஏவப்பட்ட வில்லவன் கோதையால் சிறையினின்றும் விடு விக்கப்பட்ட ஆரிய அரசர்கள் கண்ணகிக் கோட்ட; கண்ணகி யார் வழிபாட்டிற்குப் பின்னரே தந்தம் நாடு செல்ல முடியும் என்பதை நாமறிவோம். இந்நிலையில் அவண் கண்ணகி வழி பாட்டிற்காக, வந்துற்ற கொங்க, மாளுவ. இலங்கை வேந்தர் களுடன் இவ்வாரியவரசரும் கூடி. சேரனொடு பத்தினியைப்பரசித் தந்தம் நாடுகளிலும் கண்ணகியாரைக் கடவுளாக வந்துகாக்க வேண்டிய போழ்து "தந்தேன் வரம்" எனக் கண்ணகியார் அபயமேற்றார், ஏற்றுத் திகழ்ந்தார். அம்மன்னர்களின் வேண்டுகோளை கண்ணகியார் ஏற்றுத் திகழ்ந்தமையினை உரை பெறுகட்டுரையின்

1. "அன்று தொட்டு பாண்டியனுடு மழை வறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கை யிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லரா யிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கியது."

2. "அது கேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கணுட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழிலென்று மாறு தாயிற்று."

3. "அது கேட்டுக் கடல் சூழ் இலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்கள் அகவையினுங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை எடுப்ப. மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று."

4. "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத் தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவுளாகு மென நங்கைக் குப் பத்தினிக் கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ் வித்தோனே".

எனும் பகுதிகளால் அறியலாம் இவ்வாறு எங்கும் பத்தினி. வணக்கம் நடைபெற்ற நிகழ்ச்சி சிறப்பாக சோணுட்டிலும் பிற்காலத் தில் பல்கியது. அதுவே கேரளாவில் இன்று சற்றேறத்தாழ இருபது இடங்களில் காணப்படும் (பகவதி) ஒற்றை முலைச்சி வணக்கம் என்பதறிக.

— தொடரும்

சென்ற இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B. A., B L., தஞ்சை.

தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது

என்ற குறள் வழி அறிவுறுத்துவாராயினர்.

மனக்கவலையினை மாற்றுதலோடமையாது, அறத்துக்கு மாறுபட்ட பாவத்துறைகளையும் பிற தீய நெறிகளையும் நீக்கவேண்டி இறைவனது திருவடியினை மக்களுயிர்கள் போற்றிப் புணையாகக் கொண்டு, புலனடக்கத்தோடு அவனை வழிபடுதலில் யாதொரு குறைபாடில்லாது முனைப்பு ஒழிந்து நிற்கவேண்டிய நிலைமையினையும், அதன் பயனாகிய வீட்டுண்மையினையும்,

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது
கோளில் பொறியிற் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை.

எனும் குறட்பாக்களில் வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேதைமை காரணமாகப் பெருகி வரும் பிறவியினை நீக்கற்கு திருவருளாகிய இறைவனடியின் சேர்க்கை மக்களுயிர்களுக்கு இன்றியமையாதது. இன்றேல், காரணக் காரியமாய்த் தொடர்ந்து பெருகும் பிறவிகளில் வினைகளான், மீண்டும் மீண்டும் மக்களுயிர்கள் மொத்துண்டு இறையருள் கூடாது இறைவனடி சேரார் பிறவிப் பயன் இறைவனது கழல்களை வணங்கும் மாண்பில் அமைந்துள்ளதை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்'

எனுங்குறளால் வள்ளுவர் விளக்கி, வீடுபேறு பெற நல்வினையடியாக பிறவி வழியை அடைப்பது சீரிதென அருளியுள்ளார். மற்றும் யான் எனது எனும் செருக்கை அறுத்து அருளும் இறைவனது இருதாள்களை வணங்கி, அவற்றுடன் அணைந்து ஒற்றித்து உடப்பொடு கூடிய உயிர்கள், இரு வகைப் பற்றையும் விட்டு நிற்க அவை ஐவகை மலம் நீங்கப்பெற்று இறையுணர்வு மயமாய் இறையருளின் தெளிவை அடைந்து பிறப்பிறப்பு அற்ற நிலையினை எய்துமென்பதை

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்

என்ற குறளில் வள்ளுவர் நுட்பம் சிறக்க நிலையிட்டுரைத்தார்.

அறிவற்ற உலகைப் பற்றியும், அறியாமை விரவிய அறிவுடைய உயிரைப் பற்றியும் வள்ளுவர் குறிப்பாகக்கூறி இவ்விரண்டையும் அருளொடு இயக்கும் இறையைப் பற்றிச் சிறப்பாகக் கடவுள் வாழ்த்தில் விளக்கி, இறை நிறைவில் உயிர்களும், உயிர்கள் நிறைவில் உலகும் இருக்கும்பான்மையினை அறிவுறுத்துவாராயினர். மற்றும் உயிர் இறையருளால் உலகினையும் தன்னையும் தன் தலைவனையும் தன்னுடல் கொண்டு உடலின் நிலையாமையினை உற்று ஆயும் வழியினையும் அமைத்து, உலகினையும் உடையானையும் காண வைத்துள்ளார் பாசத்தோடு கூடிய உயிர்கள் உய்யுமாறு, அவை பாச நீக்கம் வழி பதியறிவில் அழுந்தி வீட்டுப் பேறடைய,

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு
இருணீங்கியின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு
பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்பதறிவு
சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்

என்ற குறட்பாக்களான் மீண்டும் கடவுள் வாழ்த்திற்கேற்ப, வள்ளுவர் பொதுவகையால் மொழிவாராயினர். இதனை எதிர் மறையான் வற்புறுத்தல் வேண்டி வள்ளுவர்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாதவர்க்கு

என அருளியதால், புலன்களை அடக்கி அவற்றால் அறியப்படுவன யாவும் அறிந்து தாரணைக்கணின்று மெய்யுணரா வழி பயனின்றாம் என்பது உணரப்படவே, பதிஞான முற்ற மெய்யுணர்வுடையார்க்கே வீட்டுப்பேறுள தென்பது உன்னற்பாலது.

— தொடரும்

பள்ளு – ஒரு பாமரர் இலக்கியமே.

சு. சண்முகசுந்தரம், எம். ஏ.,

1 0 தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளில் ஒன்றான பள்ளு இலக்கியம் பாமரர்களுக்காக எழுந்த பாமரர் இலக்கியம் என்பதை அகச்சான்றுகளால் நிறுவுதல் அல்ல; நினைவுறுதல் தான் இக்கட்டுரையின் நோக்கம். நாட்டுப்புற மக்களில் பள்ளர்கள் மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்து வருகின்றனர் அவர்கள் தங்களுக்குள் ஆடிப்பாடுபவைகளின் அருமையான தொகுப்பே பள்ளு இலக்கியம்.

2.0 பள்ளின் வரலாறு : பள்ளு இலக்கியம் தோன்றியது 16ஆம் நூற்றாண்டில்தான், என்றாலும் கூட, அதற்கான விதைகள் தொல்காப்பியத்திலேயே ஊன்றப்பட்டிருப்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது. அவ்விதைகள் முளைவிட்டுப் பள்ளாக மலர ஏறக்குறைய 16 நூற்றாண்டுகள் விழுங்கப்பட்டிருக்கின்றன என நினைவுறுகையில் வியப்பே மேலிடுகின்றது.

2.1. " சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே "
(தொல் செய். 833)

என்று தொல்காப்பியச் செய்யுள் குறிப்பிடும் ' புலன் '. பள்ளு ஆகலாம் என்பது பலர் முடிவு. " சேரி மக்கள் பேசும் எளிய சொல்லமைப்புடன் கூடிய இலக்கியங்கள் புலன் என்னும் இலக்கிய வகையினவாகும் " என்பார் திரு ந. வீ. செயராமன்.[1] " செய்யுள் வனப்பில் புலன் என்பதும் ஒன்று எனவும் பாமர மக்கள் வழங்கும் சொற்களால் ஆக்கப்பட்டு அவர்கள் ஆடியும் பாடியும் வரும் நாடகச் செய்யுளே அதற்கு இலக்கியம் எனவும் அவர் கூறுவதால் அவர் காலத்துக்கு முன்னே அவ்வகை நூல்கள் பல இருந்தன என்பது தெளியப்படும். பிற்காலத்தே நாமறிந்த அவ்வகை நூல்கள் மேற்சொன்ன (பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம்) மூவகை பிரபந்தங்களே " என்பார் திரு. மு. அருணசலம்.[2]

2 2. சிலப்பதிகாரத்தில் விருந்திற்பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு ஆகிய மூவகை இலக்கியக் கூறுகளும் பள்ளு இலக்கியத்தையே நினைவூட்டுகின்றன.

"கடிமலர் களைந்து முடிநாற முத்தித்
தொடிவளைத் தோளும் ஆகமும் தோய்ந்து
சேருடு கோலமொடு வீறுபெறத்தோன்றிச்
செங்கயல் நெடுங்கண் சின்மொழி கடைசியர்
வெங்கட் தொலைச்சிய விருந்திற் பாணியும்"
(சில. நாடு 127-131)

"கொழுங்கொடி பறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோர் ஏர்மங் கலமும்"
(சில. நாடு. 132-135)

"அரிந்து கால் குவித்தோர் அரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்"
(சில. நாடு. 136-137)

என்று சிலம்பு விருந்திற்பாணியையும் ஏர்மங்கலத்தையும் முகவைப்பாட்டையும் விளக்குகின்றது.

2.3 சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையில் ஆடும்படுபள்ளி, அழகுடைய பள்ளி என்று இருவகை வரிக் கூத்துகள் கூறப்படுகின்றன இவற்றுள் "அழகுடைய பள்ளி என்பது இளைய பள்ளியின் அழகைப் பள்ளன் வியந்துபாடும் கூத்து வகையாகவும், ஆடும்படுபள்ளி என்பது மூத்தப்பள்ளியின் இயல்புகளை விளக்கிக் கூறும் கூத்து வகையாகவும் இருக்கலாம்"[3]

2.4 பக்தர் பெருமாளரையர் பறைச்சேரியொன்றிற்குப் போய் அங்கு நடைபெற்றபள்ளுப்பாட்டு பறைப்பாட்டு முதலிய பாடல்களிலும் ஆடல்களிலும் மயங்கி அங்கேயே தங்கி விட்டார். திருவூறல் விழாவின்போது தாமும் பள்ளும் பறையும் கேட்பதை விழாவின் ஒரு பாகமாக்குகிறார் இதைக்கோயிலொழுகு மூலம் அறிகின்றோம்.

2.5. உழத்திப் பாட்டுக்கு விளக்கச் சொல்ல வந்த பன்னிரு பாட்டியல்

"புரவலர் கூறியவன் வாழிய வென்று
அகவயல் தொழிலை யொருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந்து உழத்திப்பாட்டே"
(ப. பா 333)

என விவரிக்கிறது. அதாவது இது உழவுத்தொழிலை வாழ்த்தியும் அரசனைப் புகழ்ந்தும் பாடும் பத்துப்பாடல்களால் ஆகிய ஒரு வகை சிறு இலக்கியமாகும்.

2.6. "தொல்காப்பியம் குறிப்பிடும் சேரிமொழி இலக்கியம் பற்றிய செய்தியைக் கருவாகக் கொண்டும், சிலப்பதிகாரத்தில் நாம் காண்கின்ற விருந்திற்பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு முதலிய உழவுப்பாடல்களையும், ஆடும்படுபள்ளி, அழகுடைய பள்ளி முதலிய வரிக்கூத்துக்களையும் தழுவி, கோயிலொழுகில் காணும் பள்ளுப்பாட்டு போன்றவற்றோடும் பன்னிரு பாட்டியல் கூறும் உழத்திப்பாட்டின் பொருளமைதியோடும் இணைந்து, கதைப்போக்குடன் எழுந்த ஒருவகை இலக்கிய அமைப்பே பள்ளுச் சிற்றிலக்கியமாகும்."[4] இவ்வாறு பள்ளுப் பாட்டின் வரலாற்றைச் சுருக்கமாகக் காணலாம்.

3.0 **பள்ளின் விளக்கம்:** பள்ளின் விளக்கத்திற்காகப் பலர் இலக்கணம் எழுதியுள்ளனர். முதன்முதலாக கி. பி. 14ஆம் நூற்றாண்டில்தான் இலக்கணம் எழுதப்பட்டது.

3.1. நவநீதப் பாட்டியல் ஆசிரியர்,

"கடவுள் வணக்கம் உழத்தியருங்குடும் பன்வரலொன்
றடைமுறைநாடு வளங்குயிற் கூமழைக் காங்குறியோர்ப்
படுமா றுவரற் சிறைப்புட் குறைத்தலை வன்வரற்கூப்
படுமவ னன்றுள் உரப்பல் வெளியாம்பண்
ணைச்செயலே"

"வினைச்சொல லாயர் வருவிக் கவரல் தகைமுதலாள்
தனதுரைக் கேட்டுக் குடும்பன் கிடையிருந்
தானெனவந்
தனற்றெழு மாட்டப் புலம்பல்முற் பள்ளிகூழ்
கொண்டுவரல்
சொனனவன் மன்னித்தற் கேட்க வேண்டற்கு
மறுத்திடலே."

"சூள வணைமீட் பவனைப் பணிவித் துழவருழக்
காளை வெருட்பளைபாயப் புலம்பல் எழுந்துவித்தல்
ஆளத்தலைவற் குணர்த்தல் நடல்வினை செப்பம்
செய்நெல்
நீள அளத்தல் முதற்பள்ளி கூவேசல் மூட்டவையே"

"இவ்வமயங்களிற் பாட்டுத் தலைவன் பெருமையாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவிவரத் தொடர்பு

செவ்விதிற் பாடுமது உழத்திப்பாட்டு பள்ளுமென்பர்
நவ்வி எனக்கண் மடவீர் பிறர்மதம் நாட்டுவரே ''
என்று இலக்கணம் விளக்கப்படுகின்றது

3.2. வீரமாமுனிவர் தமது சதுரகராதியில், (கி. பி. 18). '' கடவுள் வணக்கம், மூத்த பள்ளி, இளைய பள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற்கூக்கேட்டல், மழை வேண்டி கடவுட் பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக்காண்டல், இவற்றிற் கிடையிடை அகப்பொருட்டுறையும் கூறி பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகள் இருவர் முறையீடு, இளையவளை அவன் உரப்பல். பள்ளன் வெளிப்படல், பண்ணைச்செயல் வினவல், அவன் அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல் அவர் பெருமை கூறல், மூத்தப்பள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான்போல வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தப்பள்ளி அடிசிற் கொடுவரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தற்கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் ஆற்றல், அவள் அவனை மீட்க வேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளங் கூறுதல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்துவித்தல், அதைப் பண்ணைத் தலைவர்க்கு அறிவித்தல், நாற்று நடல், விளைந்தபின் செப்பம் செயல், நெல் அளத்தல், மூத்தப்பள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவருக்கொருவர் ஏசல் என இவ்வுறுப்புகள் உறப்பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவிவர இவற்றாற் பாடுவது '' என்று விளக்குகிறார் வீரமாமுனிவர் உழத்திப்பாட்டுக்கு விளக்கம் தந்தாலும் பள்ளின் இலக்கணத்தோடு பொருந்தி வருகின்றது. எனவே, பிற்காலத்தில் உழத்திப்பாட்டுக்கும் பள்ளுப்பாட்டிற் கும் உள்ள இடைவெளி குறைந்து இரண்டும் ஒன்றாகி விட்டதை அறிந்து கொள்ளலாம்.

3.3. பள்ளுப்பாட்டு நாடகமாகவும் நிகழ்த்தப்பட்டது என் பதற்கு வையாபுரிப் பள்ளில் (பக் 76) சான்று உள்ளது.

'' பள்ளேசலுக்கும் கள் சாராயத்திற்கும்
பத்தெருதையும் வித்தான்காண் ஆண்டே ''

என்பதில் பள்ளேசல் என்பது கூத்துவகையையே குறிக்கின்றது.

'' ஆலயங்களில் திருவிழா நடந்தகாலத்து, மக்கள் அவ்வத் தலத்திற்குரிய பள்ளையும் குறவஞ்சியையும் பாடியும் கூத்தாக

ஆடியும் அனுபவித்தும் வந்தார்கள், திருவாரூரிலே திருவிழாவுக்காகக் கொடியேற்றும்போதும் இறக்கும்போதும் அத்தலத்திற்குரிய பள்ளும் குறவஞ்சியும் பாடி நடிக்கப்பட்டு வந்தன.'' [5]

3 4. பள்ளு இலக்கியத்தை பள்ளு என்றும், பள்ளிசை என்றும் பள்ளேசல் என்றும் பள் மூவகை என்றும் அழைத்தனர்.

3.5. ''நெல்லுவகையை எண்ணினாலும்
பள்ளுவகையை எண்ண முடியாது''

என்ற பழமொழி பள்ளுகளின் வகைகள் அதிகம் என்பதை அறிவிக்கின்றது.

''முக்கூடற் பள்ளைப்போல ஒரு பள்ளும்
குற்றாலக் குறவஞ்சியைப் போல ஒரு குறவஞ்சியும்
வருணகுலாதித்தன் மடலைப்போல ஒரு மடலும் இல்லை''

என்ற பழமொழி, பள்ளு வகைகளில் முக்கூடற்பள்ளுதான் சிறந்த பள்ளு என்று சிறப்பிக்கின்றது.

பள்ளின் பாமர இலக்கியக் கூறுகள் :

4.0. ''புதுக்காப்பியஞ் செய்ய முனைந்தவர்கள் தாமறிந்த மக்களையும் அவர்கள் வாழ்க்கையையும் பொருளாக அமைத்துச் செய்யுட் செய்தார்கள். தமிழ்நாடு முழுவதும் பயிர் செய்வோர் மிகுதியாதலால் இவர்கள் வாழ்க்கையிலேயே பாடுவோர் மனஞ் சென்றது பயிர்த்தொழில் செய்யும் உழவரும் உழத்தியரும் தொழிலில் ஈடுபட்டிருக்கையிலேயே பாடியும் ஆடியும் தம் வாழ்க்கையை ரசமாக அனுபவித்து வந்தார்கள். இவர்களிடையே இலக்கியம் இல்லையென்பதொன்றேயொழிய பாட்டுக்கள் வேண்டியவரை வழங்கி வந்தன புது நூல்கள் செய்வதில் ஊக்கங் கொண்டிருந்த கவிஞர்கள் அப்பாடல்களைத் தாமும் அனுபவிக்கத் தொடங்கி இவைகளைத் தங்கள் திருத்தமான மொழியில் இவைகளை இலக்கியமாக்கி விட்டார்கள் இவ்வாறு எழுந்த இலக்கியங்களே பள்ளும் அதனோடொத்த மற்ற பிரபந்தங்களும்'' என்பார் திரு. மு. அருணசலம் [6] எனவே, பள்ளு நாட்டுப்புற மக்களாகிய பள்ளர்களின் வாழ்வை அவர்களது மொழியிலேயே படம் பிடிக்கும் இலக்கியமாகும்.

4.1. நாட்டுப்புற இசையில் சிந்தும் ஒன்று. இச்சிந்தில் அமைந்த பாடல்கள் பல பள்ளில் பரவியுள்ளன.

''தன தனனத் தானன தானன
தன தனனத் தானன தானன
தன தனதனத் தானன தானன
தானத் தனன''

"தானத் தன தானத் தனதத்
தானத்தன தானத் தனதத்
தானத்தன தானத் தனதந் தனதன தனத்தா"

என்று முக்கூடற்பள்ளில் சிந்து இசை குறிக்கப்படுகின்றன.

42. பழமொழிகள் பல பள்ளில் இடம் பெறுகின்றது. பழமொழி, நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றாகும்.

"வாழையடி வாழை' என்ற பழமொழி 'அடியடி வாழையாய்' என்றும், 'பத்தோடு பதினொன்று' என்பது 'பத்திலே பதினொன்றாக' என்றும், 'கொழியல் அரிசி இட்டாலும் குப்பை கிண்டும் கோழி' என்றும், 'சகதியிலே கல்லெறிந்த கதையாகாதே' என்றும், 'மூலை சாய்ந்தால் வயிறல்லவோ தாங்க வேணும்' என்றும், 'தன்வினைத் தன்னைச் சுடும்' என்பது 'தன்வினை தன்னைச் சுற்ற' என்றும், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றும் பழமொழிகள் வருகின்றன.

43. மழைவேண்டிப் பாடுவது நாட்டுப்புறத்து வழக்கமாகும் இம்மழைப் பாடல்கள் மழைக்கு முன்னரும் பின்னரும் பாடுவார்கள்.

"கொங்கு மின்னல் ஈழ மின்னல்
கூடி மின்னுதே — யொரு
கோடிவானம் பாடி மழை
தேடியாடுதே" (வையாபுரிப்பள்ளு 23)

"கொங்கு மின்னல் ஈழமின்னல்
எங்கும் மின்னுதே
குயிலொளிக்க மஞ்சள் நிற
வெயிலெறிக்குது"
(திருமலை முருகன் பள்ளு 49)

"ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி - மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே" (முக்கூடற்பள்ளு 53)

என்று மழைப்பாடலைப்பாடி மகிழ்கின்றனர்.

44 குரவையென்பது குலவையிட்டு ஆடும் ஒருவகைப் பாடல் கலந்த ஆடலாகும் பள்ளர்கள் குரவைக் கூத்து ஆடுவதைப் பார்த்து மகிழலாம்.

'பரவையொலி போல் குரவை எழுப்பி (முக் 128)

என்று குரவையின் ஒலியையும் விவரிக்கின்றது.

மழை வேண்டியும் குரவை ஆடுவது உண்டு.

"மாரி பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாம்
சேரிக்குரவை யெழத் தெய்வநிலை போற்றினரே"
(முக். 32)

"பாடினர் பொங்கலிட்டுப் பள்ளரெல்லாம் கூட்டமிட்டுத்
தேடிக் குரவையிட்டுத் தெய்வநிலைப் போற்றுவரே"
(திரு 16)

என்ற பாடல்கள் மழைக்காகப் பாடியாடுவதையும், குரவையிட்டுத் தொழுவதையும் விளக்குகின்றன.

பொன்னேர் கட்டி உழும்போதும் குரவையாடுவது உண்டு என்பதை,

"கூத்தன் முதலா யுள்ள பள்ளர் எல்லாம்
குரவையிட்டேரைப் பூட்டிக் கூடி யுழுதார்" (முக் 115)

என்ற பாடலால் அறியலாம்.

45. கும்மி கொட்டி பள்ளர்கள் ஆடுவதையும் பாடல்கள் படமாக்குகின்றன. கும்மிப் பாடல்களைப் பற்றிய செய்திகளையும், கும்மிப் பாடல்களையும் காண முடிகின்றது.

"அங்கு இங்கும் செங்கை நீட்டி
அருதியும் சின்ன கருதியும்
அரியாளும் கட்டைப் பெரியாளும் - கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே" (முக் 131)

"கும்மியடிப் பெண்ணே கும்மியடி - இரு
கொங்கைகளும் காப்புங் குலுங்கத்
தெம்முனை வேலனைக் கொண்டாடிச்
சேர்ந்து கும்மி அடியுங்கடி" (திரு 27)

"செல்லப் பெண்ணேயுனை மறப்பனோ வென்று
சொல்லிச் சொல்லி கும்மி யடித்துமே" (வை. 82)

என்று கும்மிப் பாடல்களைக் கேட்டுக் களிக்க முடிகின்றது.

46. ஏசல் பாடல்கள் என்பது உறவினர்கள் பொய்யாகத் திட்டி போலியாகக் கோபித்துக்கொள்ளும் பாடல்களாகும். திருமண விழாக்களில் ஏசல் பாடல்களும் எள்ளல் பாடல்களும் உண்டு. பள்ளியர்களின் ஏசல் தனிப்பட்ட முறைகளையும் தெய்வ முறைமைகளையும் கிண்டல் செய்கின்றது.

பழனி : பசிபொறுக்க மாட்டாமலே
சோற்றுக்குச் செத்தே — யுங்கள்
பரமனார் நஞ்சுண்டகதை
நானறியேனோ.

வையா : புசித்திடவே சோறு கிடையாமலே
யாமலேதான் யுங்கள்
புங்கவனர் மண்ணையுண்டு
கக்கவில்லேயோ
(வையாபுரிப்பள்ளு — 38)

என்று தெய்வத்தை ஏசிக்கொள்கிருர்கள் இவ்வேசல் பிறகு தனியாக பள்ளேசல் என்றும். தாய்மகள் ஏசல், லட்சுமி பார்வதி ஏசல் என்றும் தனிப்பட்ட இலக்கியங்களாக மாறிவிட்டன.

47 எள்ளல் பாடல்களும் நாட்டுப்புறப் பாடல் வகைகளில் ஒன்ருகும். பள்ளில் வரும் பண்ணையாரைப் பற்றிய எள்ளல் பாடல்கள் எல்லாம் நாட்டுப்புறப் பாடல்களையே நினைவூட்டுவன.

" வெந்தக்கட்டை மேனியனே கும்பிடுகிறேன் — சிறை
விஞ்சுங்கோழி நெஞ்சனரே கும்பிடுகிறேன்
சிந்துபொந்து காலனரே கும்பிடுகிறேன் — சளி
சீண்டிய தொண்டத்தினரே கும்பிடுகிறேன் "
(தண். 105)

" ஊளைவாயும் தலையிலே
மோளை மயிரும் — மஞ்சி
ஒத்த நரையுஞ் சுரை
வித்துப் போற் பல்லும் "
(வையாபுரிப்பள்ளு - 33)

என்ற பாடல்கள் பண்ணையாரை நன்ருகவே கிண்டல் செய்கின்றன — ஒரு புது மாப்பிள்ளையைக் கிண்டல் செய்வதுபோல.

48 நடுகையின்போது பள்ளிகள் பாடுவதுண்டு. இத்தொழிற்பாடல்கள் அவர்களது துன்பத்தை நீக்கி உற்சாகம் அளிக்கும். இப்பாடலைப் பள்ளேசல் என்றும் கூறுவர்.

" பள்ளேசல் தன்னையும்
கருதிப்பாடி நடவு நட்டிடும்
பருவப் பள்ளியர் " (பக். 80)

என்று பள்ளியர்கள் வருணிக்கப்படுகின்றனர்.

" போற்றித் துதித்து நிறை வகுத்துப்
புகழ்ந்து குரவை முழக்கி " (வை. 74)

என்ற பாடல் அடிகள், நாற்று நடும்போது குரவைப்பாடல்களைப் பாடுவதும் உண்டு என்று கூறுகின்றது.

4.9. 'அமுதம் போல் மின்னார் வள்ளை பாடும்'
(திரு 19)

என்ற பாடல் அடியால் பள்ளியர்கள் வள்ளைப் பாட்டினையும் பாடுகின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம்

4.10. 'வாழி பாடுதல்' என்பது நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும், வில்லுப் பாடல்களிலும் இறுதியில் வழக்காக வருவது. பள்ளு இலக்கியத்திலும் வாழிபாடுதல் இருப்பதால் இது ஒரு சிறந்த பாமரர் பாடலாக மாறுகிறது எனலாம். வையாபுரிப்பள்ளின் இறுதியில்,

"தேடிய பள்ளேசலைத்தான் செப்பினோர் கேட்டோர்கள்
பாடின பேர்பலன் பெற்று வாழியரே"

என்று வாழிபாடுதல் அமைந்துள்ளது.

4.11. புலம்பல் என்பது ஒப்பாரியல்ல — ஒப்பாரியின் ஒரு கூறு. இறந்தவனுக்காக மட்டுமல்ல இருப்பவனுக்காகவும் ஒப்பாரி பாடுவது உலக வழக்கு குட்டையிற் பள்ளனைக் கண்டு இளையவள் புலம்புவது ஒப்பாரிச் சுவையை வழங்குவதாகும்.

"வெளுத்த தெல்லாம் பாலாமென்று
விருதாவில் அவனை மெச்சி
வழுத்தினையே யவள் தொழிலை
வரவரக் கண்டறிவாய் பள்ளா"

என்று புலம்புகிறாள்.

"எங்கள் குல தவப்பயனே யென்னிரண்டு கண் மணியே
உங்கள் இளைக்கொரு மருந்தே" (தண். 146)

என்று மூத்தப்பள்ளி புலம்புகிறாள் பள்ளனை எண்ணி

4.12 குருகூர் பள்ளில் ஒரு பள்ளி தன் குழந்தையைத் தாலாட்டுவதாக வந்துள்ளது

4.13 கோவலன் கூத்து பற்றிய செய்தியை வையாபுரிப் பள்ளில் காண முடிகின்றது.

"தேட்டையும் ஒழித்தான் — கோவலன்
பாட்டுக்கு மழித்தான்" (பக். 53)

4.14 நாட்டுப்புற மக்களின் தெய்வ வழிபாடுகளும் விளக்கப்படுகின்றன. பள்ளர்களின் தெய்வங்களாக ஆணையடிக் கருப்பன், அம்மாபட்டிக் கருப்பன், ஆலடிக் கருப்பன், கருப்

பண்ணராயன், கன்னடிய மூர்த்தி, பவளக் கொடியம்மன், தாடகை நாச்சியார் போன்றவர்கள் விளங்குகின்றனர்.

"ஆடு வெட்டிப் பொங்கலிட்டுச்
சாடு நிறைய இரண்
டாயிரம் பழங்கள் வைத்துக்
கோயிலின் முன்பு
வேடிக்கையாய்ச் சாம்பிராணித்
தூபங்கள் போட்டு"
(வையாபுரிப்பள்ளு — பக். 17)

வழிபாட்டு நிகழ்த்துவதையும் பள்ளு இலக்கியம் விவரிக்கின்றது.

4 15 பள்ளர்களின் தொழில் உழவுத்தொழிலாகும் இவ்வுழவு சம்பந்தமான அனைத்துச் செய்திகளையும் பள்ளு இலக்கியம் விளக்குகின்றது. நெல் வகை, மாட்டு வகை, ஏர்க்கால் வகை. வித்து வகைகள் பேசப்படுகின்றன. உழவினையும், நாற்றுறுப் பறித்தல், நடுதல், களைப் பறித்தல், அறுவடை செய்தல், பொலியிடுதல் போன்றவற்றையும் இப் பள்ளு இலக்கியம் விளக்குகின்றது

'பகட்டுக் கமலை வட்டத்தில்' (முக். 47)
'பொலிதூற்றி ஆற்றி பொலி பொலியென்றொலிப்பார்' (முக் 139)

என்பவை உழவுத் தொழில் பற்றிய விளக்கங்கள்.

4 16 "கூத்துக்கும் கொட்டுக்கும் நல்லான்" (முக். 87)
"வில்லடிப் பாட்டுக்குப் பொறந்தான்" (முக். 87)

என்ற அடிகள் பள்ளர்கள் கூத்து, கொட்டு, வில்லடிப்பாட்டு ஆகியவற்றை விரும்பிக் கேட்டார்கள் என்பதை விளக்குகின்றன.

4 17. நாட்டுப்புற மக்களுக்கும், இடத்திற்குமுள்ள பெயர்கள் பாமரர் பெயர்களாகவே விளங்கும். பள்ளு இலக்கியத்திலும் இதனைக் காணலாம் குளத்துப்பற்று, ஆந்தைக்குளப் பற்று மேட்டுவயல் என்று வயல் பெயர்களும். இருளன், கறுப்பன், குஞ்சுமாடன், சங்கிலி மாடன் போன்ற பள்ளர்களின் பெயர்களும். கறுப்பி, செம்பி, நன்னி போன்ற பள்ளியர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

4.18. சிறுக்கி, வம்புச்சண்டை, கங்காணம். ஆதாயம், ஆண்டே பவிசு போன்ற வட்டார வழக்குச் சொற்களும் பள்ளு இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன

4 19. இவ்வாறு பல குறிப்புகளும் கூறுகளும் பள்ளு ஒரு பாமரர் இலக்கியமே என்று நிருபிக்கின்றன.

5 0. "நம் தமிழ்ப் புலவர்களுள் சிலர் அந்தப் பள்ளர் குறவர் பாடிய பாடல்களை மனதில் வைத்துப் பெருங்காவியங்களையே பாடி விட்டனர் அவையே பள்ளு எனவும் குறவஞ்சி எனவும் நாட்டில் வழங்குகின்றன. அடி முதல் முடி வரை இந்த இரு இலக்கியங்களும் கிராமியப் பாடல்களாகவே அமைந்துள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றாகும்" என்பார் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்.

"உழவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களிடையே நிலவிய சமுதாயக் கோட்பாடுகள் பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் சுவை நிறைந்த முறையில் எளிமையான மொழி நடையில் விளக்கும் இப்பள்ளு இலக்கியங்கள் பாமர இலக்கியங்களாக மிளிரும் மாட்சி பெற்றவையாகும்" என்பார் திரு. ந வீ. ஜெயராமன் [8]

இம்மேற்கோள்கள் இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அரணுகின்றன. இப்பள்ளு இலக்கியம், பள்ளர்கள் என்னும் நாட்டுப்புறத்து மக்களின் மக்கள் இலக்கியமாகவும், அவர்கள் அன்றாடம் பாடும் பாடல்களின் சிறந்த தொகுப்பாகவும், சீரிய களஞ்சியமாகவும், சின்ன கருவூலமாகவும் விளங்குகின்றன.

குறிப்புகள்

1. ந. வீ. ஜெயராமன், சிற்றிலக்கியச் செல்வங்கள், பக். 152
2. மு. அருணசலம், முக்கூடற்பள்ளு பக். 6
3. ந. வீ. ஜெயராமன், சிற்றிலக்கியச் செல்வங்கள், பக். 158
4. ,, ,, ,, பக் 155
5. மு. அருணசலம். முக்கூடற்பள்ளு, பக். 28
6. ,, ,, பக். 9—10
7. பேராசிரியர் அ மு பரமசிவானந்தம். வாய்மொழி இலக்கியம், பக். 139
8. ந வீ. ஜெயராமன், சிற்றிலக்கியச் செல்வங்கள், பக். 186